உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம். திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திருமதி.ச.பிரபாவதி, பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
உதவி இயக்குநர்

இடம் : திண்டுக்கல்.

செமுஆ எண்.அ1/ 953 / 2020 நாள்:13.10.2020

பொருள் : பணியமைப்பு - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - வேலைவாய்ப்பு பிரிவு - மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், திண்டுக்கல் - திரு.ஆர்.எஸ். விஷ்வபிரசாத், தட்டச்சர் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1)இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு)அவர்களின் செமுஆஎண். நிர்2/3904/2016 நாள் 08.02.2016

2)உதவி இயக்குநர்,தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு கிளைஅலுவலகம்,மதுரைஅவர்களின் செமுஆஎண். அ1/584/2016 நாள் 12.02.2016

3)அரசாணை எண்.130 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (எஸ்)த் துறை நாள்:22.07..2008

-----

ஆணைகள்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2013-14 மற்றும் 2014-15 ஆம் ஆண்டிற்கான தொகுதி நான்கில் அடங்கிய தட்டச்சர் பணிக்கு தேர்வு பெற்ற, திரு.ஆர்.எஸ்.விஷ்வபிரசாத் அவர்களை, பார்வை (1)-இல் காணும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறைகளில், மதுரை தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பணிநியமனம் செய்ய ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பார்வை (2)-இல் காணும் உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு கிளை அலுவலகம், மதுரை அவர்களின் செயல்முறைகளில், தனியரை அவ்வலுவலகத்தில் தட்டச்சராக பணிநியமனம் செய்து ஆணைவழங்கப்பட்டது.

திரு.ஆர்.எஸ்.விஷ்வபிரசாத் அவர்கள் 01.06.2016 அன்று முற்பகல் மதுரை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு கிளை அலுவலகத்தில் தட்டச்சராக பணியில் சேர்ந்தார். எனவே, தனியரின் பணியினை தட்டச்சர் பணியில் 01.06.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, இவர் மூன்றாண்டுகால தொடர் பணிக்காலத்திற்குள், தனது தகுதிகாண் பருவத்தினை ஈராண்டுகளில் நிறைவு செய்ய வேண்டுமென ஆணையிடப்படுகிறது

மேலும், தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்வதற்காக, பார்வை (3)-இல் காணும் அரசாணையில் உள்ளவாறு, தொழில்நுட்ப கல்வித்துறையால் வழங்கப்படும் Certificate Course in Computer on Office Automation தேர்வில் தனியர் தேர்ச்சி பெறவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையினைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அளிக்குமாறு, திரு.ஆர்.எஸ்.விஷ்வபிரசாத், தட்டச்சர் பணிக்கப்படுகிறார்.

13.10.2020

உதவி இயக்குநர்,
மாவட்டவேலைவாய்ப்புமற்றும்
தொழில்நெறிவழிகாட்டும் மையம்,
திண்டுக்கல்

13.10.2020 13/10/2020

பெறுநர்
திரு.ஆர்.எஸ்.விஷ்வபிரசாத்,
தட்டச்சர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
திண்டுக்கல்.